# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**STC 783/2025**

**Deposition of Witness for PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **அஜய்** | Caste | : | |
| Father/Husband Name | : | **சின்னன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(all Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.03.2026**

**முதல் விசாரணை :**

நான் உ.வாடிபட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது ஊர்காரர்கள் ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். நான் கடந்த 2025வருடம் எதிரி மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

நான் அபர்ணா என்ற பெண்ணுடன் பழக்கத்தில் இருந்தேன் என்பது சம்பந்தமாக எங்களுக்கும் மேற்படி பெண்ணின் வீட்டாருக்கும் விரோதம் இருந்து வந்தது. கடந்த 20.10.2025ம் தேதி எங்கள் ஊரில் தீபாவளி அன்று கோவில் திருவிழா நடைபெற்றது என்றும் அப்போது எங்கள் ஊர்

மந்தை அருகே மாலை சுமார் 4.30 மணியளவில் மேற்படி எதிரிகள் இருவரும் அங்கே வந்து அசிங்கமான வார்த்தையால் பேசி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், நான் ஓடிய போது கீழே விழுந்து எனக்கு கைகளில் காயம் ஏற்பட்டது என்றும், அப்போது அருகில் இருந்த சாட்சிகள் எதிரியை விலக்கிவிட்டபோது, எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக கூறி, எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளித்துவிட்டு, தற்போது எதிரிகள் எனது ஊர்காரர்கள் என்பதால் அவருடன் சமாதானம் செய்துகொண்டு, அவருக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு, சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமாதான மனு (எ.த.சா.ஆ. 1) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**STC 783/2025**

**Deposition of Witness for PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **ஆனந்த்** | Caste | : | |
| Father/Husband Name | : | **பழனி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(all Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.03.2026**

**முதல் விசாரணை :**

நான் உ.வாடிபட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது தம்பி முறை ஆவார். அ.சா.1 கடந்த 2025வருடம் எதிரிகள் மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டார். தற்போது அ.சா.1ன்னும் எதிரிகளும் சமாதானம் செய்துகொண்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

அ.சா.1ன்னும் அபர்ணா என்ற பெண்ணுடன் பழக்கத்தில் இருந்தார் என்பது சம்பந்தமாக அ.சா.1ன் தரப்பினருக்கும் மேற்படி பெண்ணின் வீட்டாருக்கும் விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 20.10.2025ம் தேதி எங்கள் ஊரில் தீபாவளி அன்று கோவில் திருவிழா நடைபெற்றது என்றும் அப்போது எங்கள் ஊர் மந்தை அருகே மாலை சுமார் 4.30 மணியளவில் மேற்படி எதிரிகள் இருவரும் அங்கே வந்து அசிங்கமான

வார்த்தையால் பேசி அ.சா.1ன்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், அ.சா.1 ஓடிய போது அவர் கீழே விழுந்து கைகளில் காயம் ஏற்பட்டது என்றும், அப்போது அருகில் இருந்த நான் மற்றும் மற்ற சாட்சிகள் எதிரியை விலக்கிவிட்டபோது, எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**STC 783/2025**

**Deposition of Witness for PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **தொத்தகாளை** | Caste | : | |
| Father/Husband Name | : | **சோனை** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(all Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.03.2026**

**முதல் விசாரணை :**

நான் உ.வாடிபட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது ஊர்காரர்கள் ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது தம்பி முறை ஆவார். அ.சா.1 கடந்த 2025வருடம் எதிரிகள் மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டார். தற்போது அ.சா.1ன்னும் எதிரிகளும் சமாதானம் செய்துகொண்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

அ.சா.1ன்னும் அபர்ணா என்ற பெண்ணுடன் பழக்கத்தில் இருந்தார் என்பது சம்பந்தமாக அ.சா.1ன் தரப்பினருக்கும் மேற்படி பெண்ணின் வீட்டாருக்கும் விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 20.10.2025ம் தேதி எங்கள் ஊரில் தீபாவளி அன்று கோவில் திருவிழா நடைபெற்றது என்றும் அப்போது எங்கள் ஊர் மந்தை அருகே மாலை சுமார் 4.30 மணியளவில் மேற்படி எதிரிகள் இருவரும் அங்கே வந்து அசிங்கமான

வார்த்தையால் பேசி அ.சா.1ன்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், அ.சா.1 ஓடிய போது அவர் கீழே விழுந்து கைகளில் காயம் ஏற்பட்டது என்றும், அப்போது அருகில் இருந்த நான் மற்றும் மற்ற சாட்சிகள் எதிரியை விலக்கிவிட்டபோது, எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.